1984 ஏப்ரல் 10]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் இருக்கின்ற நெசவுத் தொழிலாளர்களுக்கு மாநில அரசு குறைந்தபட்ச கூலி நிர்ணயித்து ரொம்ப நாட்கள் ஆகின்றன. அரசாங்கத்தின் கீழ் நடத்தக் கூடிய கூட்டுறவுத் துறை சங்கங்களிலே இது அமுல் படுத்தப் படாமல் இருக்கிறது. அப்படி அமுல்படுத்தினால் நாங்கள் துணி வாங்க மாட்டோம் என்று 'கோ-ஆப்டெக்ஸ் சர்க்குலர் அனுப்பியிருக்கிறது. தங்களுக்கு குறைந்தபட்ச கூலி தரவேண்டும் என்று கூறி அவர்கள் திருச்சியில் போராட்டம் நடத்தி நேற்று 100 பெண்கள் உட்பட சுமார் 600 பேர்கள் கைது செய்யப்பட்டு நிலைமை மிகவும் சீரியஸாக இருக்கிறது. காலையில் அதற்காக ஒரு அட்ஜார்ன்மெண்டு மோஷன் கொடுத்து இருக்கிறேன். இதற்காக அவர்கள் ஸ்டடி பண்ண வேண்டிய அவசியம், தேவை இல்லை. இது தெரிந்த விஷயம் தான். இப்போதே எடுக்கலாம். இந்த அரசு நிர்ணயித்த கூலிக்காக இப்படி பெண்கள் சிறைக்கு போவது எல்லாம் நல்லது அல்ல. எப்படி இது இந்த அரசுக்கு நல்ல பெயரை உண்டாக்கும். ஆகவே இன்றே அந்த அட்ஜார்ன்மெண்டு மோஷனை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் மற்றும் 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு பத்திரிகையின் மீது உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறோம். 31 ஆம் தேதியே இதைக் கொடுத்து இருக்கிறோம். சபை ஆரம்பித்து 2 நாட்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் டெல்லிக்குப் போயிருக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : அவர்கள் எப்பொழுது வருவார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''நைட்'' வருவார்கள். அல்லது நாளைக் காலையில் வந்துவிடுவார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : நாளைக்காவது அது எடுத்துக் கொள்ளப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எடுத்துக்கொள்வது பற்றித் தீர்மானிக்க வேண்டியவர் பேரவைத் தலைவர். அதை இந்த நாளில்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த இயலாது. அதுபற்றி அவர்தான் முடிவு

செய்ய வேண்டும். (குறுக்கீடு) பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பது பற்றிப் பேரவைத் தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும். பிரைமாபேஸி கேஸ் இருக்கிறது என்றால்தான் அதைக் கொண்டு வருவதற்கு அவர்கள் அனுமதிப்பார்கள். எனவே, பேரவைத் தலைவர் வந்தவுடன் அவரோடு பேசி முடிவெடுக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் 31 ஆம் தேதியே கொடுத்து விட்டேன். இன்றைக்கு பத்தாம் தேதி ஆகிவிட்டது. அது பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தாங்கள் கொடுத்திருந்தாலும் அதை ஆய்வு செய்ய வேண்டாமா; பரிசீலனை செய்ய வேண்டாமா? எனவே, இதுகுறித்து நாளைக்குச் சொல்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த 4 மாத காலமாக கைத்தறித் தொழிலாளர்கள் அரசு நிர்ணயித்த கூலி கிடைக்க வில்லை என்பதற்காக நேற்றையதினம் திருச்சி உறையூர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுகுறித்து திரு. ஆர். உமாநாத் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுக்கும்பொழுது அந்த விவாதத்தில் பேசிக்கொள்ளலாம், இன்றைக்கு அதை எடுத்துக்கொள்வதாக இல்லை.

(ஆ) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்காமை

திரு. சு. பாலன்: பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, வட சென்னையில் இயங்கி வருகின்ற பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்கவில்லை; அதனுடைய உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னை பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இந்த அவை நடப்பதில் ஏதாவது ஒழுங்கு முறை தவறி இருந்தால் அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் வரும். மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வருகின்ற பிரச்சினையைப் பற்றி, குறுகிய கால கேள்வியின் மூலம் கொண்டு வரலாம் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம் அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம்.